# உயர் ஸ்தானிகரின் செய்தி

இலங்கையைச்சேர்ந்த எனது அன்புக்குரிய சகோதர சகோதரிகளே,

நமஸ்கார், வணக்கம், ஆயுபோவன்!

இந்தியாவின் 75 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன். 1950 ஆம் ஆண்டு இதே நாளில் இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. இந்தியா இன்று மிகவும் முக்கியமான ஒரு திருப்பு முனையில் உள்ளது. 2047 ஆம் ஆண்டிற்குள் "விக்ஷித் பாரத்" எனப்படும் ஓர் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றமடைவதற்கான பாரிய பாய்ச்சலை மேற்கொள்வதற்கு இந்தியா தயார் நிலையில் உள்ளது.

இந்நோக்குகள் நாட்டு மக்களை மையப்படுத்தியதாக அமைந்திருக்கின்றமை பிரதமர் நரேந்திர மோடி அவர்களது தொலைநோக்கின் தனித்துவமிக்க ஒரு விடயமாக அமைந்திருப்பதனை குறிப்பிட முடியும். "சப்கா ப்ரயாஸ்" எனப்படும் எம் அனைவரதும் முயற்சி ஊடாகவே "விக்ஷித் பாரத்,, என்ற இலக்கை எட்ட முடியும் என நாம் உறுதியாக நம்புகின்றோம். அத்துடன் அபிவிருத்தி என்பது ஜனநாயகத்தை போன்றே மக்களுக்கு உரியதும் மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட வேண்டிய ஒன்றெனவும் உணரப்பட்டுள்ளது.

இதேபோல உள்நாட்டு பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான இந்திய தொலைநோக்கே எமது அயலுறவுக்கு முதலிடம் கொள்கையினை இயக்குகின்றது. அத்துடன், எமது சாகர் கொள்கையின் அடிப்படையில் எமது அயலவர்கள் அனைவருக்குமான வளர்ச்சி, பாதுகாப்பு ஸ்திரத்தன்மை, முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை நாம் தேடுகின்றோம்.

நாகரீக உறவுகள், பூகோள ரீதியான நெருக்கம், கலாசார தொடர்பு, கூட்டொருமைப்பாட்டின் வலுவான உணர்வு மற்றும் மிகவும் தொன்மை வாய்ந்த நல்லெண்ணம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய இலங்கை பங்குடைமையானது கட்டமைக்கப்பட்டது.

அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் நம்பிக்கைக்குரியதும் நம்பத் தகுந்ததுமான பங்காளியென இந்தியா தன்னை மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தியுள்ளது. இந்திய - இலங்கை பங்குடைமைக்கான எமது நோக்கிலும் மக்களுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டுள்ளது. நமது பங்குடைமைக்கான வழித்தடமானது உங்களின்

தேவைகள் மற்றும் அபிலாசைகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. இப்பாரம்பரிய நெருக்கத்திலிருந்து பொருளாதார ரீதியான பிணைப்பாக இதனை மாற்றுவதற்காக இந்த உறவானது புதிய திருப்பத்தை முன்னெடுக்கின்றது.

அண்மைய வர்த்தக புள்ளி விவரங்களின் அடிப்படையில் ஆறு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இருதரப்பு வர்த்தகத்துடன் 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் பாரிய வர்த்தக பங்காளியாக இந்தியா காணப்படுகின்றது. அத்துடன் அண்மைய ஆண்டுகளில் இலங்கையில் பாரியளவான முதலீடுகளை மேற்கொண்ட வெளிநாடாகவும் நாம் உள்ளோம். அதுமட்டுமல்லாமல் இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மிகப்பெரிய ஆதாரமாக இந்தியா தொடர்ந்தும் இருந்து வருகிறது.

2023 ஜுலையில் நமது தலைவர்களால் இணங்கப்பட்ட "தொலைநோக்கு ஆவணத்தினை" அமுல்படுத்த முயல்வதன் மூலமாக தற்போதுள்ள எமது சாதனைகளை நாமே கட்டி எழுப்புகின்றோம். உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தியாவின் பொருளாதார திறன் அதன் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுடன் இலங்கையின் தற்போதைய பொருளாதார ஸ்திரத்தன்மை, மீட்சி மற்றும் வளர்ச்சி ஆகியவை, இப்பிராந்தியம் முழுவதற்கும் அதே போல இருநாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய உறுதியான பொருளாதார பங்குடைமை ஒன்றை உருவாக்குவதற்கான தனித்துவமிக்க வாய்ப்பொன்றினை வழங்குகின்றது.

பொருளாதார செழுமையை உறுதிப்படுத்துவதற்காக தொடர்புகளை மேம்படுத்துவதே இந்த தொலைநோக்கின் தொனிப்பொருளாக உள்ளது. 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டின் பின்னர் இந்தியா இலங்கை இடையிலான கப்பல் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையின் 13வது சுற்று பேச்சுகளும் நடைபெற்றிருந்தன. பல்பொருள் விநியோக குழாய்கள், நிலத்தொடர்பு மற்றும் மின்சக்தி வலையமைப்பு ஆகிய விடயங்கள் தொடர்பான பேச்சுக்களும் முன்னேற்றமடைந்துள்ளன. இலங்கையில் யூ.பி.ஐ முறைமையை செயல்படுத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. கடந்த தசாப்தத்தில் இந்தியாவில் நாம் பெற்றுக் கொண்ட அனுபவத்தை போன்று பிரத்தியேக டிஜிட்டல் அடையாள முறைமை அமுலாக்கத்தினூடு இலங்கையில் மனிதர்களை மையப்படுத்திய மாற்றங்களை அறிமுகப்படுத்த முயலப்படுகின்றது.

இலங்கை முழுவதும் உள்ள மதஸ்தலங்களுக்கு சூரியக்கல மின் இணைப்பை வழங்குதல், இலங்கை புகையிரத சேவையினை நவீன மயப்படுத்துவதற்கான உதவி மற்றும் எரிசக்தி, துறைமுகங்கள், விமான நிலையங்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்கான எமது

முதலீடுகள் போன்றவை இரு நாடுகளுக்கும் இடையிலான நிலைபேறான நட்புறவுக்கான சான்றுகளாகும்.

அன்புக்குரிய நண்பர்களே, கடந்த மாதம் இந்திய உயர் ஸ்தானிகராக பதவியேற்ற நான், இந்திய இலங்கை பங்குடைமைக்கான கருதுகோள்கள் வரையறையற்றவை என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். நமது மக்களின் வாழ்வியலில் அதன் சாத்தியமான வலுவான தாக்கம் எனக்கு மேலும் நம்பிக்கையூட்டுகிறது. அதை மேலும் ஆழப்படுத்தவும் வலுவாக்கவும் கடினமாக உழைக்க என்னைத் தூண்டுகிறது. இந்த விடயத்தில் உங்கள் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நான் எதிர்பார்க்கிறேன்.

விகூஷித் பாரத் மூலம் ஒரு விகூஷித் இலங்கை உருவாகட்டும். இச்சிறந்த நோக்கிற்காகவே நம்மை நாமே அர்ப்பணிக்கின்றோம்!

ஜெய் ஹிந்

வணக்கம், ஆயுபோவன், தன்யாவத்.